# திருவாசகம் வெளிப்படுத்தும் திருத்தலங்களும் தற்காலத்தில் அவற்றின் வளர்ச்சி நிலைகளும் : ஓர் ஆய்வு

**தனுஷா நீலமோகன்**

இந்துநாகரிக சிறப்பு கற்கை மாணவி,
மொழித்துறை,
கலை மற்றும் கலாசார பீடம்,
இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

*thanushaneelamohan@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்***நாயன்மார்களால் பாடப்பட்ட திருமுறைகளில் கூறப்படும் தலங்களே திருமுறைத்தலங்களாகும். அந்தவகையில் திருமுறைகள் என்பது தெய்வத்தன்மை பொருந்திய முறையாகத் தொகுக்கப்பட்ட பாடல் தொகுப்பாக அமைகின்றது. சங்க மருவிய காலத்தில் களப்பிரர் ஆட்சியினில் அவைதிக நெறியின் வளர்ச்சியினால் வைதிக நெறியானது செல்வாக்குக் குன்றிய நிலையில் காணப்பட்ட வேளையில் வைதிக நெறியினை வளர்ச்சியடையச் செய்வதற்காகவும் துறவற தர்மத்திற்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கவும் இல்லறத்தின் மேன்மையை வலியுறுத்தவும் இறைவனது புகழினைப் போற்றிப் பாடுவதற்காகவும் பக்திப்பனுவல்களை நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோற்றுவித்தனர். இவையே திருமுறைகளாக பிற்பட்ட காலத்தினில் தொகுக்கப்பட்டது. நாயன்மார்களுள் குறிப்பிடத்தக்க சிறப்புடையவராக மாணிக்கவாசகரும் திகழ்கின்றார். திருவாதவூரர் எனும் இயற்பெயர் கொண்ட மாணிக்கவாசகரால் பாடப்பெற்றது திருவாசகமாகும். திருவாசகம் என்ற பெயர் திருவுடைய சொற்களாலான அருள் நூல் எனப்பொருள்படும். சொல்லழகு, பொருள் அழகு ஆகிய இரண்டும் திருவாசகத்தில் காணப்படுகிறது. பழம்பெரும் காலங்களில் தலங்கள் பலவற்றிற்கு சென்று அங்குள்ள இறைவனை புகழ்ந்து பாடிய காலமானது சிறப்புமிக்கது. திருத்தல மகிமையும் அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனது சிறப்புக்களையும் திருவாசகத்தில் காணலாம். திருவாசகத்தில் இறைவனது சிறப்புக்களை வெளிப்படுத்துவதற்காக அவர் உறைகின்ற தலங்களின் மகிமையை மிகையாக கூறுகின்றமை ஆய்வின் கருதுகோளாக அமைகின்றது. திருவாசகத்தில் கூறப்பட்ட திருத்தலங்கள் தற்காலத்தில் எப்படியான வளர்ச்சி நிலையிலுள்ளன? அத்துடன் அவ் ஆலயங்களின் சிறப்பு குறித்து மக்களின் எண்ணம் போன்றன ஆய்வுப்பிரச்சினையாக உள்ளது. திருமுறைத்தலங்கள் பற்றி பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் திருவாசகத்தில் தற்கால வளர்ச்சி நிலை குறித்த எந்தவொரு தனியான ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. இதனை ஆய்வு இடைவெளியாக கருதி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பிரதான நோக்கமாக மாணிக்கவாசகரால் திருவாசகத்தில் சுட்டப்படுகின்ற திருத்தலங்களை அடையாளப்படுத்தல். மேலும் துணை நோக்கங்களாக அவ் ஆலயங்களின் தற்கால வளர்ச்சி நிலையினை எடுத்துரைத்தல், அத்துடன் திருத்தல சிறப்பு மற்றும் மேன்மையை எவ்வாறு அவரது நூலில் வெளிப்படுத்துகிறார் என்பதனை தெரியப்படுத்தல். இதன் மூலமாக தற்காலத்தில் தல வழிபாட்டை மக்களுக்கு வலியுறுத்துவதாகவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்காக முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவாக மாணிக்கவாசகரால் எழுதப்பட்ட திருவாசகத்தின் மூலநூல் காணப்படுகின்றது. இரண்டாம் நிலைத்தரவுகளாக திருவாசகம் மற்றும் திருத்தலங்கள் தொடர்பாக வெளிவந்த சஞ்சிகைகள், கட்டுரைகள் ஏனைய நூல்கள், இணைய செய்திகள் மற்றும் காணொளிகள் போன்றனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பன்னிரு திருமுறைகளில் மாணிக்கவாசகரால் எழுதப்பட்டு எட்டாம் திருமுறையாக அமைந்துள்ள திருவாசகம் ஆய்வு எல்லையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வானது பண்புசார் ஆய்வாகவும் வரலாற்று ஆய்வாகவும் காணப்படுகிறது. பண்புசார் ஆய்வு எனக்கொள்கையில் திருவாசகத்தில் காணப்படுகின்ற திருத்தலங்களையும் அவற்றின் தற்கால வளர்ச்சி நிலை பற்றியும் ஆராய்கிறது. மாணிக்கவாசகரால் இயற்றப்பட்ட திருவாசகம் தோற்றம் பெற்ற காலப்பின்னணியில் திருத்தலங்கள் பற்றியும் அவற்றின் வரலாறு குறித்தும் ஆராய்வதால் வரலாற்றியல் ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில்களை வழிபடுவதன் மூலம் மக்கள் அருட்செல்வம், பொருட்செல்வம் பெற்று பெரு வாழ்வு வாழ்கின்றனர். ஆலயங்கள் மூலமாக கலை, கலாசார, பண்பாடுகள் வளர்க்கப்படுகின்றன. சமய நெறிகள், ஆன்மிக சிந்தனைகள் மக்களுக்கு உணர்த்தப்பட்டு வளர்க்கப்படுகின்றன. அதனடிப்படையில்*

*மாணிக்கவாசகரது திருவாசகம் வெளிப்படுத்தும் திருத்தலங்களும் தற்காலத்தில் அவற்றின் வளர்ச்சி நிலைகள் குறித்து இவ்வாய்வானது ஆராய்கின்றது.*

**திறவுச் சொற்கள்:** திருவாசகம், மாணிக்கவாசகர், திருமுறைகள், தலங்கள்

## 1. ஆய்வு அறிமுகம்

சைவ சமயக் குரவர்கள் நால்வரில் மாணிக்கவாசகரும் ஒருவராவார். இவர் ஒன்பதாம் நூற்றாண்டை சேர்ந்தவராவார். திருவாதவூரில் சிவஞானவதியாருக்கும் சம்புபாதாசிரியருக்கும் மகனாக அவதரித்தார். இவரின் இயற்பெயர் திருவாதவூரடிகள் என்பதாகும். இவர் கல்வி கேள்விகளில் சிறந்து, மன்னன் அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராக அமர்த்தப்பட்டார். தன் புலமையால் ''தென்னவன் பிரமராயன்'' எனும் பட்டத்தையும் பெற்றார். உயர் பதவி, செல்வம், செல்வாக்கு எல்லாம் இருந்த போதும் இவை வாழ்வின் இறுதி நோக்கமல்ல என்பதை உணர்ந்த திருவாதவூரர் சைவ சித்தாந்தத்தை ஆராய்ந்து சிவ வழிபாடு மேற்கொண்டு ஒழுகி வரலானார். இவர் அருள்வாசகர், மணிமொழியார் போன்ற பெயர்களாலும் வழங்கப்படுகின்றார். ஞான நெறியைப் பின்பற்றிய இவர் முப்பத்திரண்டு ஆண்டுகளே வாழ்ந்து ஆனி மகத்தில் சிதம்பரத்தில் சாயுச்சிய முத்தியடைந்தார்.

இத்தகு சிறப்புப் பொருந்திய மாணிக்கவாசகர் திருவாசகம், திருக்கோவையார் போன்ற நூல்களைப் பாடியுள்ளார். அவை பற்றி நோக்குமிடத்து, இறைவனை வாழ்த்தும் நூல்களில் பக்தனின் ஆன்மிக அனுபவத்தைச் சொற்களாகப் பிழிந்தெடுத்து, கசிந்துருகிப் பேசுபவை உலகில் சில நூல்களே. அவ்வாறு காணப்படும் சில நூல்களில் திருவாசகமும் சிறப்புப் பெறுகின்றது. திருவாசகம் என்ற பெயர் திருவுடைய சொற்களாலான அருள் நூல் எனப்பொருள்படும். திருமறைகளில் எட்டாந் திருமுறையாக திருவாசகம் உள்ளது. திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்பது மூதுரை. பக்திச்சுவையும், மனதை உருக்கும் தன்மையும் கொண்ட திருவாசக பாடல்கள், தமிழில் சிறந்த இலக்கியங்களின் வரிசையில் வைத்து எண்ணப்படுகின்றது. திருவாசகத்தை தேன் எனக்கூறுதல் மரபு. தேன் உடற் பிணிக்கு மருந்தாகும். இதனை வெண்பா, ''தொல்லை இரும்பிறவி சூழும் தளைநீக்கி அல்லல் அறுத்து ஆனந்தமாக்கியதே எல்லை மருவா நெறியொளிக்கும் வாதவூர் எங்கோன் திருவாசகமென்னும் தேன்''. என்கிறது.

திருவாசகம் ஐம்பத்தொரு பகுதிகளையும் அறுநூற்று ஐம்பத்தெட்டு பாடல்களையும் கொண்டுள்ளது. ''பன்னிரு திருமுறைகளில் திருமந்திரம் (பத்தாம் திருமுறை) சிறப்புடையது. ஆனால், அதைவிட சிறப்புடையதும் சிகரமானதும் திருவாசகமே'' என்கிறார் திருமுருக கிருபானந்தவாரியார். மாணிக்கவாசகரின் பக்தி வெளிப்பாட்டினை திருவாசகத்திலும் இலக்கிய திறனை திருக்கோவையாரிலும் காணலாம்.[1]

பிரபஞ்ச இயற்கையின் இரகசியங்களை கட்டவிழ்த்தபடி இயற்கையின் பல்வேறு நிகழ்ச்சிகளோடும், இயல்புகளோடும், கூறுகளோடும் வாசிப்பவர்களை அரவணைத்தபடி இயற்கை அதீதத்தின் உச்சத்தை நோக்கிய பயணத்தை எய்துவதாகவே திருவாசகம் கட்டமைக்கப்பட்டிருப்பது புலனாகின்றது.[2]

ஆலயம் என்பது ஆன்மாக்கள் இறையருளில் லயப்படும் இடம் என பொருள்படுகிறது. இதனை கோவில் எனவும் அழைப்பர். கோ+இல்= கோவில் என்பது இறைவன் மகிழ்வோடு இருக்கும் இடம் எனப்பொருள்படுகின்றது. ''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்கிறார் ஔவையார். ''திருக்கோயில் இல்லாத திருவிலூர்'' என திருமுறைகளும் எடுத்தியம்புகின்றன. ''ஆலயம் தானும் அரண் எனத் தொழுமே'' என்பது சிவஞானபோத சூத்திரமாக அமைகின்றது. ஆலயங்கள் ஆண்டவனை சிந்திக்க வைக்கும் இடங்கள் என்பதை இந்த அடிகள் வலியுறுத்துகின்றன. இவ்வாறான கூற்றுகளில் இருந்து கோயில்களின் முக்கியத்துவம் எடுத்துக்காட்டப்படுகின்றன.

திருக்கோயில்களை வழிபடுவதன் மூலம் மக்கள் அருட்செல்வம், பொருட்செல்வம் பெற்று பெரு வாழ்வு வாழ்கின்றனர். ஆலயங்கள் மூலமாக கலை, கலாசார, பண்பாடுகள் வளர்க்கப்படுகின்றன. சமய நெறிகள், ஆன்மீக சிந்தனைகள் மக்களுக்கு உணர்த்தப்பட்டு

வளர்க்கப்படுகின்றன. தொகுப்பாக நோக்கின் திருவாசகத்தில் எடுத்துரைக்கப்படும் தலங்கள் குறித்து தற்கால வளர்ச்சிப் போக்கு பற்றி ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

## 2. ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது பண்புசார் ஆய்வாகவும் வரலாற்று ஆய்வாகவும் காணப்படுகிறது. பண்புசார் ஆய்வு எனக்கொள்கையில் திருவாசகத்தில் காணப்படுகின்ற திருத்தலங்களையும் அவற்றின் தற்கால நிலை பற்றியும் ஆராய்கிறது. மாணிக்கவாசகரால் இயற்றப்பட்ட திருவாசகம் தோற்றம் பெற்ற காலப்பின்னணியில் திருத்தலங்கள் பற்றியும் அவற்றின் வரலாறு குறித்தும் ஆராய்வதால் வரலாற்றியல் ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 2.1 ஆய்வு மூலங்கள்

இவ்வாய்விற்காக முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

*அ. முதலாம் நிலைத்தரவாக மாணிக்கவாசகரால் எழுதப்பட்ட திருவாசகத்தின் மூலநூல் காணப்படுகின்றது.*

*ஆ. இரண்டாம் நிலைத்தரவுகளாக திருவாசகம் மற்றும் திருத்தலங்கள் தொடர்பாக வெளிவந்த சஞ்சிகைகள், கட்டுரைகள் ஏனைய நூல்கள், இணைய செய்திகள் மற்றும் காணொளிகள் போன்றனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

### 2.2 இலக்கிய மீளாய்வு

ஜெயசெந்தில்நாதன், பு.மா., (2001), திருமுறைத்தலங்கள், என்ற நூலில் திருவாசகத்தில் கூறப்படுகின்ற தலங்கள் தொடர்பாக அறியமுடிந்தது.

சுவாமி சித்பவானந்தர், திருவாசகம், என்ற நூலில் திருவாசகம் பற்றிய வரலாற்றினையும் மாணிக்கவாசகர் பற்றிய குறிப்புக்களையும் தலங்கள் பற்றி சிறப்பிக்கும் பாடல்களை அறிந்து கொள்ள முடிந்தது.

ரகுபரன்,க., பிரசாந்தன்,ஸ்ரீ., (2015), திருவாதவூரரும் சைவத்திருநெறியும், இந் நூலில் மாணிக்கவாசகர் பற்றிய வரலாறும் சைவ சமயம் குறித்தும் பல கருத்தியல்களை அறிந்து கொள்ளமுடிந்தது.

கோமதி,ஆ., (2017), ஆய்வு : திருவாசகம் காட்டும் மணிவாசகர், இவ்வாய்வில் திருவாசகம் பற்றியும் மணிவாசகர் குறித்தும் அறிந்து கொள்ளமுடிந்தது.

மீனக்கண்ணி மாணிக்கம்., (2018), ஆய்வு : மொரீசியசு தமிழர்களுள் திருவாசகமும் திருப்புகழும் பெறுமிடம், இவ்வாய்விலிருந்து திருவாசகம் பற்றிய குறிப்புகளை பெறமுடிந்தது.

## 3. கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்

திருவாசகத்தில் கூறப்படுகின்ற திருத்தலங்கள் தற்காலத்தில் எவ்வாறான வளர்ச்சிப் போக்கினை கொண்டுக் காணப்படுகின்றன என்பது பற்றியும் மக்கள் மத்தியில் பெறும் செல்வாக்கினையும் ஒவ்வொரு ஆலயமாக நோக்குமிடத்து,

திருப்பெருந்துறை

சிதம்பரம் (தில்லை)

திரு உத்தரகோசமங்கை

திருவண்ணாமலை

திருக்கழுக்குன்றம்

போன்ற ஆலயங்களின் ஊடாக இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 3.1 திருப்பெருந்துறை

உலக உயிர்கள் வீடுபேறு பெறுவதற்குச் சாதமாக பிறவி துயரிலிருந்து கரையேற துணையாக-பெரும் துணையாக விளங்கும் தலமாக விளங்குவதால் பெருந்துறை எனப்பெயர் பெற்றது. திருவாசக ஐம்பத்தொரு பகுதிகளுள் இருபது பகுதிகள் இத்தலத்தில் பாடப்பெற்றவை. மாணிக்கவாசகர் தனது நூலில் திருப்பெருந்துறை ஆலயம் குறித்து விளக்கியுள்ளார் .அதாவது இத்தலத்தினில் நம் தேவனாகிய ஈசன் செந்தழலாகிய தீயின் வடிவம் கொண்டு உறைகின்றான் என்று,

''பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே
செந்தழல் புரை திருமேனியும் காட்டித்
திருப்பெருந்துறையுறை கோயிலும் காட்டி.''[3]

சிறப்பிக்கப்படுகின்றது. அத்துடன் திரிபுரம் எரித்த தோற்றத்தினை கொண்டு சிவன் அங்கு எழுந்தருளியுள்ளார் எனவும் கூறப்படுகிறது.

இதனை,

'' நித்தனே அடையார் புரமெரித்த
சிலையனே யெனைச்செத்திலாடப்பணியாய்
திருப்பெருந்துறை மேவிய சிவனே.''[4]

கூறுகின்றது. மேலும் அருட்பத்தில் செழுமையான மலர்களை கொண்ட குருந்த மர நிழல் கொண்ட திருப்பெருந்துறையில் வீற்றிருப்பவர் என்று குருந்த மர சிறப்பின் மூலம் தெளிவுபடுத்துகின்றார்.

'' செங்கண் நாயகனே திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்''[5]
என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிருண்ணிப்பத்து பாடல்களிலும் திருப்பெருந்துறை சிவனை முக்கியப்படுத்துவதாக அமைகின்றது. அங்கு எழுந்தருளியுள்ள இறைவனது தோற்றப்பொழிவு, தலச்சிறப்பு போன்றன குறிப்பிடப்பட்டுள்ளது.

''சேற்றார் வயல் புடைசூழ் திருப்பெருந்துறை உறையும்…''[6]
''செச்சைமலர் புரைமேனியன் திருப்பெருந்துறை உறைவான்…''[7]
''தேன்பாய் மலர் கொன்றை மன்னு திருப்பெருந்துறை உறைவாய்…''[8]

அத்துடன் திருப்பெருந்துறை பற்றி திருவாசகத்தில் பாண்டிப்பதிகம், திரு ஏசறவு, அற்புதப்பத்து, சென்னிப்பத்து, திருவார்த்தை, திருவெண்பா முதலிய பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய திருப்பெருந்துறை ஆலயமானது தற்காலத்தில் பெரும் சிறப்புடன் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. திருப்பெருந்துறை ஆலயத்தின் தற்கால நிலை குறித்து ஆராய்வோமானால்,

தமிழ் நாட்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கிக்கு அருகில் அமைந்துள்ளது. திருப்பெருந்துறை தற்போது மக்களால் ''ஆவுடையார் கோயில்'' என்று வழங்கப்படுகின்றது. இவ்வாலய இறைவன் ஆத்மநாதர் ஆவார். அத்துடன் பதினெட்டு பெயர்களாலும் சிறப்பிக்கப்படுகின்றார். எடுத்துக்காட்டாக பரமசுவாமி, குருந்தகவனேசர், மகாதேவர், மாயபுரநாயகர் போன்றவற்றை குறிப்பிடலாம். இறைவி யோகாம்பாள் ஆவார். தலமரம் குருந்தமரம் ஆகும். தீர்த்தம் அக்கினித்தீர்த்தம் (திருத்தமரம் பொய்கை)ஆகும்.

வெள்ளாறு எனத்திருவாசகத்தில் போற்றப்பட்ட சுவேதநதி பாய்கின்ற வயற்பரப்புக்கள் நிறைந்த பகுதியாக இது காணப்படுகின்றது.

இவ்வாலயத்திற்கு பதினெட்டு திருநாமங்கள் வழங்கப்படுகின்றது.

உதாரணமாக யோகபீடம், குருந்தவனம், தட்சிணகைலாயம், சதுர்வேதபுரம், ஆதிகைலாயம், தேசுவனம், சிவபுரம் போன்றவற்றை குறிப்பிடலாம். குருமூர்த்தமாக அமைந்த இத்தலம் தெற்கு நோக்கியுள்ளது. இதனை விடவும் குருந்தம் மேவிய குருபரனான ஆத்மநாதர் அருவமாக இருந்து சித்தத்தை சிவமாக்கும் சித்தினைச் செய்தருளுகின்றார்.

இங்கு புழுங்கல் அரிசிச்சோறு, பாகற்காய் கறி, முளைக்கீரை விசேட நிவேதனமாகும். இத்துடன் தேன்குழல், அதிரசம், அப்பம், வடை முதலானவையும் படைக்கப்படும். மேலும் இங்கு சுவரில் காணப்படும் வண்ண ஓவியங்கள் மிகப்பழமையானவை. தற்போது அழிந்த நிலையில் உள்ளன. உதாரணமாக அண்டரண்ட பட்சியின் வண்ண ஓவியம்.

இன்றும் தானம் பற்றிய சாசனக் கல்வெட்டுக்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மூலவருக்கு மகுடாகமம் உத்திரபாகத்தின் படி பூஜைகள் இடம்பெறுகின்றன. நாள்தோறும் ஆறு கால பூஜைகள் இடம்பெறுகின்றன. தினமும் சல்லரி இசைக்கருவி இசைக்கப்படுவதோடு கோயிலுக்குரிய இசைக்கருவியாக தவள சங்கம் காணப்படுகின்றது. மேலும் பல்வேறு வகையான இசைக்கருவிகளும் இங்கு இசைக்கப்படுகின்றது.

மேலும் கொடிமரம், பலிபீடம், நந்தி, சண்டேசுவரர் இக் கோயிலில் இல்லை. இங்கு ஆனி, மார்கழி மாதம் இரு உற்சவங்கள் நடைபெறும். ஆனி மாத உற்சவம் மகத்தானது. மாணிக்கவாசகர் இத்தலத்தில் உபதேசம் பெற்றுச் சிறப்பெய்தியபடியால் அவர் இறைவனோடு ஒன்றிக்கலந்த ஆனிமகத்தை ஒட்டி உற்சவம் நடக்கும். உற்சவமும் அவருக்கு தான் நடைபெறுகிறது. சுவாமிக்கு உற்சவமில்லாத படி மணிவாசகருக்கு நடப்பதால் இதனை பக்தோற்சவம் என்று நினைக்கலாகாது. மாணிக்கவாசகர் சிவமாகவே விளங்குவதால் இதனை பிரமோற்சவமாகவே கூறவேண்டும். திருவிழாக் காலத்தில் இடபம், திருத்தேர் முதலான வாகனங்களில் மணிவாசகர் திருவுலா வருகின்றார்.

### 3.2 சிதம்பரம் (தில்லை)

''கோயில்'' என்று பொதுவாக வழங்கினாலே சைவத்தில் சிதம்பரம் நடராசபெருமான் கோயிலைத்தான் குறிக்கும். அந்த சிதம்பரக் கோயிலில் மாணிக்கவாசகர் பக்திப் பாடல்களை பாடியுள்ளார். தில்லை நடராசப்பெருமானின் ஆடல் கலை சிறப்பு ஆலயத்தோடு கூடி சிறப்பிக்கப்படுவதை,

''எம் பெருமான் அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப்பாடி நாம் பூவல்லி கொய்யாமோ''[9]

என்றும்,

''தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல் உயிர் எல்லாம் பயின்றனன்''[10]

என குறிப்பிடுகின்றார். செம்பொன்னாலான உடுக்கையை வலக்கையினால் பற்றியிருக்கும் அழகானது தில்லையில் ஆடப்பெறும் இறைவனில் காணமுடியும். இதனை,

''செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே…''[11]

இத்தகைய சிதம்பர ஆலயமானது தற்காலத்திலும் பெரும் சிறப்புடன் இயங்கி வருகின்றது. தற்கால நிலை குறித்து ஆராயுமிடத்து தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டத்தில் தில்லை எனும் ஊரில் காணப்படுகிறது. இன்று ஊர்ப்பெயர் வழக்கில் மறைந்து கோயிலின் பெயரான சிதம்பரமே ஊர்ப்பெயராக வழங்கி வருகின்றது. இத்தல இறைவன் நடராசர் ஆவார். இறைவி சிவகாமசுந்தரி ஆவார். தலமரம் தில்லை மரமாகும். இங்கு காணப்படும் தீர்த்தம் பத்து ஆகும். அவை சிவகங்கை, குய்ய தீர்த்தம், புலிமடு, வியாக்கிரபாத தீர்த்தம், அனந்த தீர்த்தம், நாகசேரி, பிரம தீர்த்தம், சிவப்பிரியை, திருப்பாற்கடல், பரமானந்தகூபம் என்பனவாகும். இங்கு இறைவன் விராட்புருஷனின் வடிவத்தின் திருவாரூர் மூலாதாரமாகவும், திருவானைக்கா ''உந்தி''யாகவும், திருவண்ணாமலை மணிப்பூரமாகவும், திருக்காளத்தி கழுத்தாகவும், காசி புருவமத்தியாகவும், சிதம்பரம் இருதயஸ்தானமாகவும் சொல்லப்படுகின்றது.

பஞ்ச பூத தலங்களுள் இது ஆகாயத்தலமாகும். நடராஜ சந்நிதிக்கான கொடிமரம் தங்கத்தகடு வேய்ந்ததாக காணப்படுகின்றது. சிற்றம்பலம் - சிற்சபை நடராஜ பெருமானுக்கு பக்கத்தில் சிதம்பர ரகசியம் உள்ளது. ஆகாய வடிவில் சிவன் இருக்கின்றார் என்பதை குறிப்பால் உணர்த்தும் வகையில் சிதம்பர ரகசியம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆனந்த தாண்டவம் புரியும் சிவனின் வலது புற மேல் கையில் உடுக்கையை கொண்டு இருப்பது இந்த உலகம் ஒலியின் மூலம் துவங்கியது என்பதாக நம்பப்படுகின்றது இன்றைய அறிவியல் அறிஞர்கள் இதைத்தான் ''பெருவெடிப்புக்கொள்கை'' என அழைக்கின்றார்கள். ஜெனிவாவில் உள்ள உலகின் மிகப்பெரிய அணுவாராய்ச்சி அமைப்பான செர்ன் (CERN) என்ற இடத்தில் இந்த நடராஜ சிலை வைக்கப்பட்டுள்ளது. சிதம்பர நடராசருக்கு தினந்தோறும் ஆறுகால பூசைகள் நடைபெறுகின்றன. இந்து தொன்மவியல் கணக்கின் படி மனிதர்களின் ஓர் ஆண்டு என்பது தேவர்களுக்கு ஓர் நாளாகும். ஒரு நாளில் ஆறு கால பூசைகள் நடைபெறுவது போல தேவர்கள் செய்யும் பூசையாக ஆண்டுக்கு ஆறு பூசைகள் இடம்பெறும்.

இரத்தினத்தால் செய்யப்பட்ட நடராஜர் விக்கிரகமும் ஆதிசங்கரர் அளித்த ஸ்படிக லிங்கமும் இன்றும் சிதம்பர ஆலயத்தில் பூஜித்து வரப்படுகின்றது. சிதம்பரக் கோயிலில் நாட்டியாஞ்சலி என்ற நாட்டிய விழா ஒவ்வொரு வருடமும் நடைபெறுகின்றது. இங்கு உலகில் பல்வேறு இடங்களில் நாட்டியம் பயிலும் கலைஞர்கள் தங்களுடைய நாட்டியத்தை அர்ப்பணமாக வழங்குகின்றனர். கலைஞர் இங்கு வந்து நாட்டிய அர்ப்பணம் செய்வதை ஓர் பெருமையாக கருதுகின்றனர். இக் கோயிலின் கிழக்கு கோபுரத்தில் நூற்றியெட்டு சிவதாண்டங்களுக்கான சிற்பங்கள் காணப்படுகின்றன.

### 3.3 திரு உத்தரகோசமங்கை

இவ்வாலயமானது பாண்டிய நாட்டில் உள்ளது. திருவாசகத்தில் பல இடங்களிலும் (முப்பத்தெட்டு இடங்கள்) இத்தலம் புகழ்ந்து பாடப்பட்டுள்ளது. மதுரை-இராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலையில் பரமக்குடி, சத்திரக்குடி முதலியவற்றை தாண்டி வலப்புறமாக பிரிந்து செல்லும் தூத்துக்குடி திருச்செந்தூர் சாலையில் சென்று உத்தரகோசமங்கை புகையிரத கடவையினை தாண்டி ஏழு கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. சாலை பிரியுமிடத்தில் இந்த ஆலயத்திற்குரிய பெயர்ப்பலகை உள்ளது. இராமநாதபுர சமஸ்தான தேவஸ்தானத்திற்குரிய திருக்கோயிலாக இது காணப்படுகின்றது. இறைவன் மங்களேசுவரர், மங்களநாதர் ஆவார். இறைவி மங்களேஸ்வரி, மங்களாம்பிகை ஆவார். தலவிருட்சம் இலந்தை மரமாகும். தீர்த்தமாக அக்கினித்தீர்த்தம் உள்ளது.

இத்தலம் குறித்து புராணக்கதை ஒன்று உள்ளது. அதாவது, சொக்கலிங்கப்பெருமான் பரதவர் மகளாக சபித்து பின் சாபவிமோசனம் செய்து அம்பாளை மணந்து கொண்டு இத்தலத்திலேயே அம்பாளுக்கு வேதப்பொருளை உபதேசம் செய்து, இங்கிருந்த அடியார் சிவயோகிகள் முதலிய பல்லாயிரவர்க்கும் ஞானோபதேசம் செய்து முத்தி நல்கி பின்னர் அம்பிகையுடன் மதுரையை சேர்ந்ததாக மதுரைப்புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது. இக்கருத்தை திருவிளையாடற்புராண வலைவீசின படலத்துள் பின்வருமாறு எடுத்துரைக்கப்படுகிறது.

''…தருமால் விடைமேல் தோன்றி
வீண்ணிடை நின்றான் சென்றான் வேத்திரப்படையானோடும்
உண்ணிறை அன்பரொடும் உத்தரகோச மங்கை…''[12]

*ISBN: 978-955-627-013-6*

இத்தலத்தின் பழமையினை உணர்த்துவதாக இப்பகுதியில்,

"மண்தோன்றிய போதே மங்கை தோன்றியது"

எனும் பழமொழி வழங்கப்படுகிறது. மாணிக்கவாசகர் திருவாசகத்துள் இத்தலத்தினையும் பெருமையினையும்,

"வெறிவாய் அறுகால் உழுகின்ற பூம் பொழில் உத்தரகோசமங்கைக்கு அரசே..."[13]

நீத்தல் விண்ணப்பம் எனும் திருவாசகப்பகுதி இத்தலத்தில் அருளப்பெற்றது. கீர்த்தித்திருவகவல், திருப்பொன்னூசல், திருச்சதகம், திருப்பள்ளியெழுச்சி முதலிய பகுதிகளிலும் இத்தலம் குறிக்கப்பட்டுள்ளது.

கீர்த்தித்திருவகவலில்,

"உத்தர கோச மங்கையுள் இருந்து வித்துக வேடம் காட்டிய இயல்பும் ..."[14]

என்று வரும் தொடர் இத்தல புராணத்தில் எட்டாம் சருக்கத்தில் கூறப்படுகின்ற இறைவன் ஆயிரம் முனிவர்களுக்கும் தன் வடிவம் காட்டி காட்சி தந்த வரலாற்றை குறிக்கின்றது. இதனால் இத்தலத்தில் உறைகின்ற இறைவனுக்கு "காட்சி கொடுத்த நாயகன்" என்ற பெயர் ஏற்பட்டது. இத்தகைய சிறப்பு பொருந்திய இத்தலத்தின் தற்கால நிலைகுறித்து ஆராயுமிடத்து இறைவன் ஐந்தரை அடி உயரம் கொண்ட விலைமதிப்பிட முடியாத மரகதத்தினாலான திருமேனியை கொண்டுள்ளார். நடராசர் ஆண்டு முழுவதும் சந்தனக்காப்பில் காட்சி அளிக்கின்றார்.

இக் கோயிலில் ஏழு நிலை கொண்ட ராஜ கோபுரம் உட்பட மொத்தம் ஐந்து கோபுரங்கள் உள்ளன. உட்பிரகாரம் நுழையும் போது அழகிய வேலைப்பாடுகளுடன் காணப்படும் யாழிகளில் இரு யாழிகளின் வாயில் கல்லாலான பந்து காணப்படுகிறது. கையை நுழைத்து இப்பந்தை நகர்த்த முடியும். இன்று மானிடர்களின் செயற்பாட்டால் தொடுவதை அனுமதிப்பதில்லை.

இக்கோயில், முதன்மை திருக்கோயில் என்ற வகைப்பாட்டில் இந்து அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. பரம்பரை அறங்காவலர்களால் நிர்வகிக்கப்படுகின்றது. இங்கு காரணாகம முறைப்படி வழிபாடு நடைபெறுகின்றது. முக்கிய விழாக்களாக மார்கழி மாத ஆருத்ரா தரிசனம், சித்திரை, மார்கழி மாத எட்டாம் நாள் திருக்கல்யாணம், ஒன்பதாம் நாள் தேர் விழா போன்றன காணப்படுகின்றன. மார்கழித்திருவாதிரையில் அன்று ஒரு நாள் மட்டுமே நடராசருக்கு சந்தனக்காப்பு முழுவதும் களையப்பட்டு இரவு அபிசேகங்கள் நடைபெறுகின்றன. சித்திரை மாதம் "சித்திரை தேரோட்டம்" நடைபெறுகின்றது. இவ்வாலயம் காலை ஆறு தொடக்கம் பன்னிரண்டு மணிவரையும் மாலை நான்கு தொடக்கம் எட்டு மணி வரையும் பக்தர்கள் தரிசனம் செய்வதற்காக திறந்திருக்கும்.

### 3.4 திருவண்ணாமலை

திருவண்ணாமலையானது, இந்தியாவின் தமிழ் நாடு மாநிலத்தில் அமைந்துள்ள திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கும் ஒரு சிறப்பு நிலை நகராட்சியாகும். நினைத்தாலே முத்தி தரும் ஏழு நகரங்களில் ஒன்றாகும். இங்கு மலையே இறைவனின் சொரூபமாகும். வல்லாள மன்னனுக்கு மகனாக வந்து அவதரித்து இறைவன் அருள் செய்த பதி இதுவாகும். இவ்வாலயமானது அண்ணாமலையார் உண்ணாமுலையாளுடன் எழுந்தருளி அன்பர்கட்கு அருள் புரிகின்ற அற்புதத்தலமாகும். இத்தலத்தில் மணிவாசகர் திருவாசகத்தில் திருவெம்பாவை, திரு அம்மானை பாடியுள்ளார். இதுமட்டுமல்லாது திருவாசகத்தில் பல்வேறு இடங்களில் இவ்வாலயத்தினைப் பற்றிப் பாடியுள்ளார்.

"கண்ணால் கழல் காட்டி நாயேனை ஆட்கொண்ட

அண்ணாமலையானை பாடுதுங்கான் அம்மானாய்…"[15]

மணிவாசகரை ஆட்கொண்ட அண்ணாமலை இறைவனை பாடுவதில் அவர் பெருமிதம் கொள்வதாக கூறப்படுகின்றது. இறைவன் என்று கூறாமல் ஆலயத்தோடு இணைத்துக் கூறுகின்றார். இதனூடாக ஆலயச்சிறப்பு புலப்படுகின்றது.

இதன் தற்கால வளர்ச்சி நிலை பற்றி கூறும்போது,

அண்ணாமலையார் ஆலயம் மிகவும் புகழ் வாய்ந்தது. இறைவன் அண்ணாமலையார் ஆவார். இவ்வாலயத்தினது இறைவி உண்ணாமுலையம்மன் எனவும் அழைக்கப்படுகின்றார். இது சிவபெருமானின் பஞ்சபூத தலங்களுள் அக்கினித் தலமாகும். இங்கு ஆண்டிற்கு நான்கு முறை பிரம்மோற்சவம் நடைபெறுகின்றது. இவற்றுள் கார்த்திகை மாதத்தில் கொண்டாடப்படுகின்ற பிரம்மோற்சவம் சிறப்பானதாகும். இது பத்து நாட்கள் கொண்டாடப்படுகிறது. இந்த விழாவின் பத்தாம் நாள் கார்த்திகைத் தீபத்திருநாள் ஆகும். மலையின் உச்சியில் இது ஏற்றப்படுகின்றது. கார்த்திகைத் தீபத்திருநாள் அன்றும் பௌர்ணமி தினத்திலும் பக்தர்கள் அண்ணாமலையை வலம் வருகின்றார்கள். இதனை மலை வலம் எனவும் கிரிவலம் என்றும் அழைக்கின்றார்கள். பக்தர்கள் வலம் வருகின்ற கிரிவலப்பாதைகள் இரண்டு உள்ளன.

இரமண மகரிஷி ஆச்சிரமம் திருவண்ணாமலையில் அமைந்துள்ளது. இதனைச் சுற்றிப்பார்க்க கட்டணம் இல்லை. தங்குமிட வசதி உண்டு. இங்கு பல வெளிநாட்டவர்கள் வந்து தங்குகின்றனர். வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் முருகனுக்கு சார்த்திய வேல் இன்றுமுள்ளது. நாள்தோறும் ஆறுகால வழிபாடுகள் இடம்பெறுகின்றன.

### 3.5 திருக்கழுக்குன்றம்

திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் திருக்கோவில் ஆயிரத்து நானூறு ஆண்டுகள் தொன்மை வாய்ந்தது. தொண்டைநாட்டுத்தலங்களில் ஒன்றாகும். மணிவாசகர் திருவாசகத்தில் கழுக்குன்றப்பதிகத்தில் இத்தலத்தினை பற்றி பாடியிருக்கின்றார். எண்ணில்லாத திருக்கோலங்களுடன் இறைவன் மணிவாசகர் கண்முன்னே காட்சியளித்த தலமாக சிறப்பித்துக்கூறுகின்றார். என்பதனை,

"கணக்கில்லாத் திருக்கோலம் நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே"[16]

என்ற பாடலினூடாக அறிய முடிகிறது. இப்படியான திருத்தலத்தின் தற்கால நிலை பற்றி நோக்குமிடத்து,

தமிழ் நாட்டின் செங்கல்பட்டு மாலட்டத்தில் உள்ள திருக்கழுக்குன்றத்தில் அமைந்துள்ளது. இவ்வாலய இறைவன் வேதகிரீஸ்வரர் ஆவார். இறைவி சொக்கநாயகி ஆவார். தலவிருட்சம் வாழை மரமாகும். தீர்த்தமாக சங்குத்தீர்த்தம் காணப்படுகிறது. திருமலையை சுற்றி பன்னிரு தீர்த்தங்கள் உள்ளன. இங்குள்ள சங்குத்தீர்த்ததில் ஒரு மண்டலத்திற்கு (நாற்பத்தெட்டு நாட்கள்) விடியற்காலையில் நீராடி திருமலையை வலம் வருவோருக்கு மன நோய்கள் அகலும் என்பது இங்குள்ள மக்களின் தீவிர நம்பிக்கையாகும்.

ஆண்டுதோறும் இங்கு நடைபெறும் சித்திரை மாத தேர்த்திருவிழா மிகவும் பிரசித்தி பெற்றது. திருக்கழுக்குன்றம் திருமலையில் ஆண்டுதோறும் கார்த்திகை மாதத்தில் ஒரு திங்கள் கிழமையில் ஆயிரத்தெட்டு சங்குகளால் வேதகிரீஸ்வரருக்கு அபிசேகம் நடைபெறும். அங்குள்ள சங்குகளில் இதற்கு முந்திய காலங்களில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தோன்றிய அதிசய சங்குகளும் இடம்பெற்றிருக்கும். கடந்த 01.09.2011 அன்று இங்குள்ள சங்குத்தீர்த்தக்குளத்தில் சங்கு பிறந்தது. சங்குத்தீர்த்தக்குளத்திலிருந்து கொண்டு வரப்படும் புனித நீர் கொண்டு இறைவனுக்கு அபிசேகம் நடைபெறும்.

பன்னிரு ஆண்டுகளுக்கு ஒருமுறை குருபகவான் கன்னி லக்னத்தில் நுழையும் நாளன்று மாலையில் லட்சதீபத்திருவிழா கொண்டாடப்படுகிறது. அன்று வீடுகளிலும் கோயில்களிலும் சங்கு தீர்த்தக்குளத்திலும் இலட்சக்கணக்கில் விளக்குகள் ஏற்றப்பட்டு ஊர் முழுவதும் ஒளி வெள்ளத்தில் மிதக்கும். இந்த திருவிழாவானது வட இந்தியாவில் கொண்டாடப்படும்.

புஷ்கரமேளா, கும்பமேளாவிற்கு இணையானது. கடைசியாக 02.08.2016 அன்று லட்சதீப பெருவிழா கொண்டாடப்பட்டது.

## 4. முடிவுரை

திருவாசகத்தில் கூறப்பட்ட தலங்களின் தற்கால வளர்ச்சி நிலை பற்றி நோக்குமிடத்து, அவை தற்போது உன்னதமான நிலையிலே காணப்படுகின்றன. இங்கு ஆகம விதிப்படி பூஜைகள் மற்றும் உற்சவங்கள் இடம்பெறுகின்றன. மேலும் இத்தகைய ஆலயங்கள் அனைத்து மக்களாலும் புனித யாத்திரைத் தலங்களாக அவை அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாலய புனர்நிர்மானம் குறித்து நோக்கும்போது அக்காலக் கட்டடக்கலைப்பாணியின் வளர்ச்சிநிலையினை எம்மால் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. எனினும் தற்கால நவீனமயமாக்கலுக்கு ஏற்ப கட்டடம், சிற்பம், ஓவியம் முதலிய கலைகளிலும் தற்காலத்திற்கேற்ப சில மாற்றங்கள் உருவாகியுள்ளது. எனினும் அவை வரவேற்கத்தக்கவை. உலகில் பல்வேறு நாடுகளில் இருந்தும் நடனக்கலைஞர்கள் இவ் ஆலயங்களுக்கு வருகை தந்து தமது நாட்டியாஞ்சலி சமர்ப்பணத்தினை மேற்கொள்கின்றனர். இது உலகளாவிய ரீதியில் இந்துப் பண்பாடு பரவியமைக்கான எடுத்தக்காட்டாகவும் அறிந்து கொள்ள முடிகின்றது. இத்தகைய முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கின் திருவாசகம் வெளிப்படுத்தும் திருத்தலங்களும் தற்காலத்தில் அவற்றின் வளர்ச்சி நிலைகளும் மிகவும் சிறப்பானதாக காணப்படுகின்றது. அத்துடன் திருமுறைத் தலங்கள் குறித்து மேற்கொள்ளப்படவுள்ள இனிவரும் ஆய்வுகளுக்கு துணை செய்யும்.

### அடிக்குறிப்புகள்

1. சுபராஜ், ந., (2015), திருவாதவூரரும் சைவத்திருநெறியும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், ப.251.
2. முகுந்தன், எஸ்., (2015), திருவாதவூரரும் சைவத்திருநெறியும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், ப.499.
3. சுவாமி சித்பவனார்,(), திருவாசகம்: ப. 639
4. மேலது, ப. 662
5. மேலது, ப. 711
6. மேலது, ப. 759
7. மேலது, ப. 760
8. மேலது, ப. 760
9. மேலது, ப. 582
10. மேலது, ப. 151
11. மேலது, ப. 519
12. திருவிளையாடற்புராணம், பாடல்: 2710
13. திருவாசகம் சில சிந்தனைகள், பாடல்: 109
14. சுவாமி சித்பவனார்,(), திருவாசகம்: ப. 871
15. மேலது, ப. 501
16. மேலது, ப. 717

### உசாத்துணைகள்

கோமதி,ஆ., (2017), ஆய்வு : திருவாசகம் காட்டும் மணிவாசகர்.

சுபராஜ், ந., (2015), திருவாதவூரரும் சைவத்திருநெறியும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

சுவாமி சித்பவானந்தர், (), திருவாசகம், தபோவன அச்சுப்பள்ளி, திருப்பராய்துறை.

மீனக்கண்ணி மாணிக்கம்., (2018), ஆய்வு : மொரீசியசு தமிழர்களுள் திருவாசகமும் திருப்புகழும் பெறுமிடம்.

முகுந்தன், எஸ்., (2015), திருவாதவூரரும் சைவத்திருநெறியும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

ரகுபரன்,க., பிரசாந்தன்,ஸ்ரீ., (2015), திருவாதவூரரும் சைவத்திருநெறியும்.

ஜெயசெந்தில்நாதன், பு.மா., (2001), திருமுறைத்தலங்கள்,வர்த்தமானன் பதிப்பகம்..